விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 204 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 27 வெள்ளிக்கிழமை (11.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## செம்மணிப் புதைகுழி அகழ்வு தற்காலிகமாக நிறுத்தம்

### இதுவரை 65 எலும்புக்கூடுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 65 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் அகழ்வுப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணி மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் 65 எலும்புத் தொகுதிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ள

02ஆம் பக்கம் பார்க்க

தங்கம், ஆயுதங்களைத் தேடி

## புதுக்குடியிருப்பில் புலிகளின் பதுங்கு குழியில் தேடுதல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் விடுதலைப் புலிகளின் பதுங்கு குழியில் தங்கம், ஆயுதங்கள் இருப்பதாக

15ஆம் பக்கம் பார்க்க

கடன் தொல்லை காரணமாக

## விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் கடன் தொல்லை காரணமாக விபரீத முடிவெடுத்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச்

15ஆம் பக்கம் பார்க்க

இலங்கைப் பொருட்களுக்கு

## 30% தீர்வை வரி

### அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 30% தீர்வை வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் வெள்ளை மாளிகையால் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

புத்தூர் வாதரவத்தையில்

## முழங்காவிலைச் சேர்ந்த யுவதி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தையில் முழங்காவிலைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கிளிநொச்சி முழங்காவிலைச் சேர்ந்த லோகவேந்தன் றுகிந்தா

15ஆம் பக்கம் பார்க்க

## பால்மா, பால் தேநீர் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதியொன்றின் விலை 100 ரூபாயால் அதிகரித்துள்ளது.

இலங்கை பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி 400 கிராம் பால்மா பொதியொன்றின் புதிய விலை 1,200 ரூபாயாகும் என அறி

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை செய்த தவறே அமெரிக்க வரிக்கான காரணம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

இலங்கை செய்த தவறே அமெரிக்காவின் வரிக்கான காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்



(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் பொது மக்களின் காணியை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை

15ஆம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பைச் சேர்ந்தவர்

## தமிழகத்தில் அகதியாக தஞ்சம்

(சென்னை)

மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று தமிழகத்தில் அகதியாக தஞ்சம்

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் கோர விபத்து 4 வயது சிறுவன் பலி

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற கோர விபத்தில் 4 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மன்னார் நானாட்டான் பிரதான வீதி நறுவிலிக்குளம் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் தந்தை, தாய், மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் நேற்று மாலை நானாட்டான் நோக்கி

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



மலர்வு 07 . 02 . 1953

உதிர்வு 10 . 07 . 2025

10.07.2025 வியாழன் அன்று இறைபதமடைந்த

## தியானந்தராஜாக் குருக்கள் சிவகௌரிஅம்மா

அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
நெல்லண்டையாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... சாந்தி....சாந்தி.....

(1315)

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குடும்பம்,
சிவஸ்ரீ இராமசுந்தரலிங்கக் குருக்கள் குடும்பம்

# வடக்கில் உணவுப் பயிர்ச்செய்கை வீழ்ச்சி விவசாயிகளின் வாழ்வாதாரமும் பாதிப்பு

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், வடக்கின் உப உணவுப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்து வருவதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிப்படைந்து வருவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (9) நடைபெற்ற அமர்வின் போது 27/2 இல் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் பின்வருமாறு சிறீதரன் எம்.பி கேள்வியெழுப்பினார்.

விவசாய மாவட்டமான யாழ்ப்பாணத்தில் நெற்செய்கைக்கு மேலாக உப உணவுப் பயிர்களான சின்ன வெங்காயம், வேதாள வெங்காயம், உருளைக்கிழங்கு, திராட்சை, கரட், கருணைக்கிழங்கு, பீற்றூட், வாழை, மரவள்ளி, மிளகாய் போன்ற பயிர்கள் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு, தீவகம், தென்மராட்சி போன்ற பெரும் பிரதேசங்களின் பேரூர்களில் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, இவ்வூர்களில் வாழும் விவசாயிகள் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்து, அறுவடை செய்யும் போது இறக்குமதி வரி விதிப்பு செய்யப்படுவது வழமை. ஆனால் கடந்த மூன்று வருடங்களாக இவ்வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. காலநிலைப் பாதிப்புகளையும் கடந்து உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் யாழ்ப்பாண விவசாயிகளின் நடைமுறை இடர்பாடுகள் எவை என்பதையும், யாழ்ப்பாணச் சின்ன வெங்காயத்துக்கான கேள்வி தற்போது வெகுவாகக் குறைந்துள்ளதையும், கடந்த இரண்டு வருடங்களாக உற்பத்திக்கான மானிய அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு கிடைக்கப்பெறவில்லை என்பதையும், சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலத்தில், விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் அரசால் இறக்குமதிகளுக்கு எதிரான வரி விதிக்கப்படுமா? என்பதையும், கடந்த மூன்று ஆண்டுகளாக ஏன் இந்த வரி விதிப்பு நடைமுறைப்படுத்தப் படவில்லை என்பதையும் அமைச்சர் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை முன் வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் முன்வைத்த கேள்விகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை தரவுகளுடன் பதிலளிப்பதாக அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டார். (ம-7)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு (13.06.2025) வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சுப்பிரமணியம் சிவபாலன்

(சிப்பால் மாஸ்ரர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் அவரது துக்கத்தில் கலந்து கொண்ட நண்பர்கள், உறவுகள் அனைவரும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

(4757)

குளப்பிட்டி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் : குடும்பத்தினர்
076 415 3661
021 222 5583

# செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் 15ஆம் நாள் பணிகள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது புதைகுழிகளில் அடையாளம் காணப்பட்ட 65 மனித எலும்புக் கூட்டு தொகுதிகளும் முற்றாக நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு நடவடிக்கைகள் நேற்றைய தினத்துடன் 24 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மனித புதைகுழியில் இருந்து 63 எலும்பு கூடுகளும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" புதைகுழியில் இருந்து இரண்டு எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" புதைகுழியில் குழப்பகரமான முறையில் மனித எலும்பு எச்சங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட எலும்புக் கூட்டு தொகுதிகள் அனைத்தும் சட்ட வைத்திய அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட பை , காலணிகள், கண்ணாடி வளையல்கள், ஆடையை ஒத்த துணிகள் , பொம்மை உள்ளிட்ட பொருட்கள் சான்று பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (ம-7,33,104)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி. **சுபாசினி பரமேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி குலசேகரன் இரஞ்சினி

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு 1956.05.11 உதிர்வு 2025.07.10

(C-3382)

பாடசாலைச் சமூகம்
[illegible] இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.

# எதிர்...

நிலையில் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட நிபுணர் குழுவினர் மற்றும் பணியாளர்கள் உடல், உளரீதியாக சோர்வடைந்த நிலையில் புதைகுழி அகழ்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் பிள்ளையானுக்கும் தொடர்பிருக்கிறது

## எம்மைக் குறை கூறி பயனில்லை என்கிறார் அமைச்சர்

**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் எமது ஆட்சியில் இடம்பெற்றதைப் போல எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் இந்த விடயத்தில் ஊமை போன்று இருந்தவர்கள் இன்று எம் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஆச்சரியமாக உள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**



பாராளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019.04.21 ஆம் திகதி குண்டுத்தாக்குதல்கள் இடம் பெற்றபோது ஜோசப் பரராச சிங்கம் படுகொலை விவகாரத்தில் பிள்ளையான் மட்டக்களப்பு சிறையில் இருந்துள்ளார். இருப்பினும் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அவர் முன்கூட்டியே முழுமையாக அறிந்துள்ளார் என்பதற்கு உறுதியான சாட்சியம் மற்றும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பிள்ளையான் சிறையில் இருந்தபோது இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவருடன் நெருக்கமாக பழகியுள்ளார். பிள்ளையான் தொடர்பில் பெரிய சந்தேகங்கள் காணப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்போம். எவரையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை.

முன்னாள் அமைச்சர் பிள்ளையானின் ஊடக செயலாளரான அசாத் மௌலானா என்பவர் செனல் - 04 தொலைக்காட்சி சேவைக்கு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவம் பற்றி பாரதூரமான விடயங்களை முன்வைத்திருந்தார். இவர் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கத்தோலிக்க சபை உட்பட பல்வேறு தரப்பினர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்தபோதும், முறையான விசாரணைகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை.

2018.11.30 ஆம் திகதியன்று மட்டக்களப்பு வவுனத்தீவு பொலிஸ் பாதுகாப்பு அரனில் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியான அஜந்தன் என்பவரை குற்றவாளியாக்கும் வகையில் சாட்சியங்கள் சோடிக்கப்பட்டன. விசாரணைகளை திசை திருப்புவதற்காக போலியான சாட்சியங்கள் உருவாக்கப்பட்டன. போலியான சாட்சியங்களை திரட்டிய குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் பின்புலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் இருப்பதாக இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. ஏனைய சந்தேக நபர்கள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள்.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியமற்றது. தேசிய மட்டத்தில் தற்போது சிறந்த முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது. சாய்ந்தமருது பகுதியில் தற்கொலை குண்டுத்தாக்குதலால் உயிரிழந்த சாரா ஜெஸ்மினின் டி.என்.ஏ பரிசோதனைகள் ஆரம்பத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், 3 ஆவது தடவையாக எடுத்த பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டி.என்.ஏ. பரிசோதனைகளிலும் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளோம். சாரா உயிருடன் உள்ளாரா அல்லது இறந்துவிட்டாரா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. இவ்விடயம் தொடர்பான விசாரணை அறிக்கைகளை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்போம் என அவர் தெரிவித்தார். (நி)

# புலமைப்பரிசில்தாரர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

2025 வரவு செலவுத் திட்ட முன்மொழிவினூடாக தரம் 5 புலமைப் பரிசில்தாரர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு 2025 ஏப்ரல் மாதம் முதல் ரூபாய் 750 இலிருந்து ரூபாய் 1500 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடு பொதுத் திறைசேரியினால் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த ஒதுக்கீடானது கணக்காளரின் (நிதி) 2025.06.23 ஆம் திகதி ED/5/77/3/25 இலக்கமுடைய கடிதம் மூலம் அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் தற்போது வலுவில் உள்ள 06/2020 சுற்றுநிருபத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளும் வரையில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்காக அதிகரிக்கப்பட்ட ரூபாய் 1500 புலமைப்பரிசில் கொடுப்பனவினை ஏப்ரல் மாதம் முதல் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# ‘அருண’ ஆகிய ‘அநுர’

## தீயாய் பரவும் ட்ரம்பின் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்செயலாகத்தவறாக எழுதியமை, சமூக ஊடகங்களில் அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. இலங்கை ஏற்றுமதிகளுக்கு 30 சதவீத வரிவிதி ப்பை அறிவிக்கும் கடிதம், நேற்று முன்தினம் இலங்கை உட்பட்ட 6 நாடுகளுக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் கடிதத்திலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை, டொனால்ட் ட்ரம்ப், “அருண” குமார திஸாநாயக்க என்று குறிப்பிட்டுள்ளார்.

2025 ஜூலை 9 திகதியிட்டு வெள்ளை மாளிகையின், அதிகாரபூர்வ கடிதத் தலைப்பில் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த தவறைச் சுட்டிக்காட்டி, சமூக ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. (நி)

# டெங்கு நோயாளர்களில் 27 சதவீதமானோர் சிறுவர்கள்

## தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 சதவீதமானோர் சிறுவர்கள் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவிக்கையில்,


நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 226 பாடசாலைகள் நுளம்பு மற்றும் நுளம்புக் குடம்பிகள் பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 27 சதவீதமானோர் சிறுவர்களாவர்.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அரசாங்கத்தின் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்துக்கமைய நேற்று முன்தினம் முதல் அனைத்து பாடசாலைகளிலும் சுத்தம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எவ்வாறெனினும் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது வீடுகள் ஓரளவு பாதுகாப்பான நிலைமையில் உள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் பணியாற்றி
12.07.2025 நாளை
ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்
திருமதி.
கலைவாணி ரவீந்திரன்
(Dip in Bharatham)
அவர்களை
சீரும் சிறப்பும் பெற்று
வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மயிலிட்டி வடக்கு கலைமகள்
மகா வித்தியாலயம். (1311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தாய்லாந்தில் இடம்பெறவுள்ள வலுதூக்கல்
## யாழ். வீராங்கனை பங்கேற்பு




12 ஆவது உலகளாவிய வலுதூக்கல் போட்டி இம் மாதம் 17 ஆம் திகதி தாய் லாந்தில் நடைபெறவுள் ளது.

இப் போட்டியில் யாழ்ப் பாணம், காங்கேசன்துறை யைச் சேர்ந்த வீராங் கனை தனலட்சுமி முத்துக் குமாரக் குருக்கள் பங்கு பற்றவுள்ளார்.

பளுதூக்கும் வீராங் கனையான இவர் ஏற்க னவே பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (3)

## மாகாணமட்ட மென்பந்து கிரிக்கெட் தொடர்
## முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி
# சம்பியன் வென்று சாதனை




வடக்கு மாகாண பாடசாலை களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டி யில் முல்லைத்தீவு முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி சாதனை படைத் துள்ளது.

அந்த வகையில் வடமாகாண பாடசாலைகளுக் கிடையி லான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியா னந்தக் கல்லூரி இரண் டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத் தக்கது.

மாகாண பாடசாலைகளுக் கிடையிலான போட்டியில் முல்லைத்தீவு முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி சம்பியனானமை இதுவே முதல் தடவை என்பது தும் குறிப்பிடத்தக்கது. (3)

## விம்பிள்டன் டென்னிஸ் தொடரில்
## துருக்கி வீராங்கனை சாதனை



விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் முதல்முறை யாக பங்கேற்ற துருக்கி வீராங்கனை ஜெய்னெப் சொன்மெஸ் (23 வயது) 2ஆவது சுற்றில் சீன வீராங் கனை ஜிங்யு வாங்கை 7-5, 7-5 என நேர் செட்க ளில் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டி களில் மூன்றாவது சுற்று க்கு முன்னேறிய துருக்கி வீராங்கனையாக சாதனை படைத்தார்.

எனினும் இவர் 3ஆவது சுற்றில் எகட்ரினா எல க்சன்ட்ரோவாவிடம் தோல் வியடைந்தார். (3)

## பங்களாதேஷ் உடனான ரி-20 தொடரில்
## இலங்கை வீரர் வனிந்து விலகல்




பங்களாதேஷ் அணி யுடனான ரி-20 தொடரில் வனிந்து ஹசரங்க விளை யாடமாட்டார் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விடுத்துள்ள அறிவித்தலில் இதனைத் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி யுடன் கடந்த வெவ்வாய்க்கி ழமை நடைபெற்ற மூன் றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியின் போது தனது வலது காலின் தொடைத் தசையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரை ரி-20 தொடரில் இணைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடிய வேளை யில், இறுதி ஓவரில் (49.2) ஓட்டமொன்றை பெறும் போது கால் இடறியதில் அவர் காயத்திற்குள்ளா- னார்.

மருத்துவ ஆலோ சனையின் பேரில், அவர் பல்லே கலிருந்து கொழும்பிலு ள்ள உயர் செயற்பா ட்டு மைய த்திற்கு (High Perfor- mance Centre) சிகிச்சைக்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிரிக் கெட் நிறுவனம் குறிப்பி ட்டுள்ளது.

இதேவேளை, ஹசரங்க விற்குப் பதிலாக ரி-20 அணியில் எவரும் இணை க்கப்படமாட்டார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

## கிளப் உலகக்கோப்பை கால்பந்து
## இறுதிப் போட்டியில் பி.எஸ்.ஜி அணி




கிளப் அணிகளுக்கான 21ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெ ரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன் றில் ரியல் மாட்ரிட் - பாரிஸ் செயிண்ட் -ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணிகள் மோதின.

சம பலம் வாய்ந்த இரு அணிகள் மோதியதால் இந்த ஆட்டத்தில் அனல் பறந்தது.

பரபரப்பான இந்த ஆட் டத்தில் ஆதிக்கம் செலு த்தி சிறப்பாக விளையா டிய பாரிஸ் செயிண்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனால் அந்த அணி இறுதிப்போட்டிக்கு முன் னேறியது.

எதிர் வரும் 14ஆம் திகதி நடைபெற உள்ள இறுதிப்போட்டியில் பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) - செல்சி அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (3)

## இந்தியா - இங்கிலாந்து 3 ஆவது டெஸ்ட்
## நாணய சுழற்சியில் இங்கிலாந்து வெற்றி



இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'ஆண்டர்சன்- தெண்டுல்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங் கேற்றுள்ளது. லீட்சில் நடந்த முதலாவது டெஸ்டில் இங்கி லாந்து 5 விக்கெட் வித்தியா சத்திலும், பர்மிங்காமில் நடந்த 2ஆவது டெஸ்டில் இந்தியா 336 ரன்கள் வித்தியாசத்தி லும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி லண டன்லார்ட்சில் நேற்று ஆரம்பமா கியது.

இந்நிலையில் இந்த ஆட்டத் திற்கான நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற இங்கிலா ந்து அணி முதலில் துடுப்பாட் டத்தை தேர்வு செய்துள்ளார். அதன்படி இந்தியா முதலில் பந்து வீச உள்ளது. (3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகுசிறப்பாக இடம்பெற்றது. (படம்-சதீஸ்)



இலங்கையில் ஹலோரஸ் மனிதாபிமான கண்ணி வெடியகற்றல் நிறுவனம் மூன்று இலட்சம் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது. இந்த மூன்று இலட்சம் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியிலுள்ள தலைமை அலுவலகத்தில் திட்ட உதவி முகாமையாளர் Hannah picton தலைமையில் நடைபெற்றது. (படம்:தேவானந்தன்)



வணிக வாரத்தை முன்னிட்டு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் வணிக சந்தை ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

# வரி விதிப்பு தொடர்பில் ஓகஸ்ட் வரை கலந்துரையாடல்

## அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்க இலங்கை முடிவு

(கொழும்பு)

வர்த்தக வரி குறித்து அமெரிக்காவுடன் இலங்கை தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும் என்று நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதி, இறுதி வரை மேலும் கலந்துரையாடல்கள் நடைபெறும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக அமெரிக்கா விதித்த 44% வரியை 30% ஆகக் குறைப்பது சாத்தியமானதாகவும் ஹர்ஷன சூரியப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை ஏற்றுமதிகளின் மீது ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 30% இறக்குமதி வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அமெரிக்கா மீது விதித்துள்ள வர்த்தகத் தடைகளை நீக்குமாயின், அமெரிக்கா விதித்துள்ள வரிகளை மீளாய்வு செய்ய வாய்ப்பு இருப்பதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1309)

UK-1350, Australia-1950, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2490, France-2180

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308


# மரண அறிவித்தல்

## திருமதி. இரஞ்சினி குலசேகரன்



கரவெட்டி தெற்கைப்பிறப்பிடமாகவும் இலக்கம் 47, டச்சு விதி கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இரஞ்சினி குலசேகரன் அவர்கள் 10.07.2025 அதிகாலை 3.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் திரு.திருமதி கந்தப்பு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரியும் திரு.கந்தப்பு சிவராஜா அவர்களின் அன்புச் சகோதரியும் திரு.கி.குலசேகரன் (ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர் - இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி க.தர்சினி (உதவி அதிபர்- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) திருமதி ப.சுபாசினி (ஆசிரியர்- யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) திருமதி து. யோகேந்தினி (உதவி அதிபர்- வவு/சைவபிரகாச மகளிர் கல்லூரி), செல்வி கு.டனுஷினி (ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். திரு.வே.கருணாகரன் அதிபர் (யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), திரு.க.பரமேஸ்வரன் ஆசிரியர் (யா/ சென்மேரிஸ் வித்தியாலயம்), திரு.ந.துளசிதன் (தாதிய உத்தியோகத்தர் - மந்திகை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் க.ஷரவணப்பிரியன், க.நிஷோதா, க.பிரமோத், ப.சகீர்த்தனன், ப.தாரகன், து.ஹர்ஷியா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை எமது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை 11.07.2025 காலை 8 மணிக்கு நடைபெற்று தகன கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல் - குடும்பத்தினர் - 077 128 1361

(சி-3379)

# இராசிபலன்

11.07.2025
ஆனி 27, வெள்ளிக்கிழமை
பிரதமை பின்னிரவு 3.02 மணிவரை

பூராடம் முற்பகல் 7.19 மணிவரை
சுப நேரம் 5.59-7.29 மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை

வளவன்




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், இனிமையான நாள்.




வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், போசன சுகமுண்டு.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்தில் உள்ளத்திலும் அமைதி கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.




சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.





நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.





நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

நூலகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத வீடு போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மஹோற்சவ பெருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று வியாழக் கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக நடைபெற்றது. அதிகாலை 3.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி 7.30 மணிக்கு தீர்த்தோற்சவத்திற்கு அம்பாள் புறப்பட்டுச் சென்று தீர்த்தோற்சவம் நடைபெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபபூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (3)

## கீரிமலையில் வெடிகுண்டு மீட்பு

(அராலி)

கீரிமலை-புதுகொலணி பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியில் துப்பரவு பணிகள் மேற்கொண்ட போது வெடிகுண்டு இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது.


இதனையடுத்து தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறித்த வெடிகுண்டை பாதுகாப்பாக மீட்டு சென்றுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 450 | 350 |
| தக்காளி | 180 | 200 | 250 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 |
| கோவா | 300 | 400 | 450 | 300 |
| கரட் | 400 | 450 | 450 | 370 |
| பூசணி | 120 | 140 | 150 | 120 |
| புடோல் | 100 | 150 | 200 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 |
| பாகற்காய் | 500 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 250 |
| பீற்றூட் | 250 | 200 | 350 | 240 |
| கறிமிளகாய் | 600 | 500 | 700 | 550 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 700 | 420 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 40-120 | 100 | 50 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 160 | 150 | 80-150 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 580 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 120 | 80 | -- |

# கொலைகளுக்கு நீதி வேண்டும் யாழில் மாபெரும் நடைபவனி




(யாழ்ப்பாணம்)

அனைத்து படுகொலைகளுக்கும், அனைத்து வகை வன்முறைகளுக்கும் எதிராக நீதிகோரும் நடைபயணம் ஒன்று யாழில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கம் இப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி, இந்த நடைபயணம் .கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நுழைவாயில் வரை நடைபெற்றது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், எந்த வன்முறையாலும் எங்களை ஒடுக்க முடியாது. வன்முறை நிறைவுக்கு கொண்டு வருவோம். மண்ணுக்கு கீழ் கொலைகளை புதைக்காதீர்கள். வாழும் உரிமையை அழிக்காதீர்கள். நியாயம் கோருவோம் பயத்தில் வாழமாட்டோம். நியாயம் கோராத வன்முறைகளும் கொலைகளும் மக்கள் பேரெழுச்சியாக மாறும், கொலைகளுக்கு நீதி வேண்டும் மன்னிப்பு அல்ல போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் நடைபயணத்தில் பெருமளவான மக்கள்.சமூக செயற்பாட்டாளர்கள், சிறுவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)



# வீதி விபத்துக் குறித்து யாழில் விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இளவாளையில் வீதி விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

"வீதி விபத்தை தடுப்போம்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இளவாலை பிரதேச வைத்தியசாலையிலிருந்து மெய்கண்டான் பாட சாலை வரை நடைபவனி நடைபெற்றது.

விதிகளை மதிப்பது உயிரைக் காப்பது, மதிப்படாத சிக்னல் மரணத்தின் அழைப்பிதழ், ஒரு நிமிடம் பொறுமை ஒரு வாழ்நாள் பாதுகாப்பு" ஆகிய வாசகங்கள் மற்றும் வீதிப் பாதுகாப்பு சார்ந்த பதாதைகளை தாங்கியவாறு மாணவர்கள் நடைபவனியில் ஈடுபட்டனர்.

இந்த நடைபவனியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை செயலாளர், தெல்லிப்பழை சுகதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள், தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், இளவாலை பொலிஸார், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டிசம் பாதிப்புள்ள பிள்ளைகளுக்கு பராமரிப்பு நிலையங்களை அமைக்க திட்டம்



(கொழும்பு)

ஓட்டிசம் மற்றும் நரம்பியல் வளர்ச்சி பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்காக பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு தேசிய அளவிலான பொறி முறையை தயாரிப்பதற்கான கூட்டுத் திட்டத்திற்கான எண்ணக்கரு ரீதியான முன் மொழிவை இரண்டு வாரங் களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க சம்பந்தப்பட்ட அதிகா ரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் எண்ணக் கருவின் அடிப்படையில் செயற் படுத்தப்படும் இந்தத் திட்டம் குறித்து சமூக சக்தி செயலகத் தின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந் துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுக்கள் மற் றும் நிறுவனங்களால் செயற் படுத்தப்படுவதோடு ஒருங்கி ணைப்பு பணிகளை ஜனாதி பதி அலுவலகம் மேற்கொள் ளும் என அவர் தெரிவித் தார். (நி)

# பிள்ளையானுடன் அரசாங்கத்திற்கு எந்த டீலும் கிடையாது

## பிரதி அமைச்சர் மஹிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பிள்ளையானுடன் அரசாங் கத்திற்கு எந்த டீலும் கிடை யாது. அவ்வாறு டீல் இருந்தி ருந்தால் இனிய பாரதி கைதா கியிருப்பரா? என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகை யில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவோம், சூத்திர தாரிகள் மற்றும் குற்றவாளிக ளுக்கு தண்டனை வழங்கு வோம்.

மக்களுக்கு வழங்கிய வாக் குறுதியில் இருந்து ஒரு துளி யளவேனும் விலக மாட் டோம்.

விசாரணைகளை துரித மாக முடித்து சகல இலங்கை யர்களுக்கும் நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக் கவே முயற்சிக்கின்றோம்.

பல்வேறு காரணங்களால் இதில் தாமதங்கள் ஏற்பட் டுள்ளன.

எவ்வாறாயினும் நாங்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை முன்னெ டுத்துச் செல்வோம் என்பதனை உறுதியாக கூறிக்கொள்கின் றோம்.

இதேவேளை இந்த விட யத்தில் தவறான கருத்துக் களை பரப்ப வேண்டாம். பய ங்கரவாத தடைச்சட்டத்தில் சிறையில் உள்ள பிள்ளை யானுடன் அரசாங்கம் டீல் வைத்திருப்பதாக குறிப்பிடு வதை முற்றாக நிராகரிக்கி றோம். மக்களுடனேயே டீல் உள்ளது. அந்த டீலை முறை யாக செயற்படுத்துவோம் எனத் தெரிவித்தார். (நி)

# ஆட்டோ வடிவிலான கைப்பை

## விலையை கேட்டு வாய்பிளக்கும் நெட்டிசன்கள்



பிரபல ஃபேஷன் பிராண் டான லூயிஸ் உய்ட்டன் நிறு வனம் ஆட்டோ வடிவிலான புதிய ஆடம்பர பையை அறி முகம் செய்துள்ளது.

இந்த ஆட்டோ வடிவிலான ஆடம்பர பையின் விலை ரூ.35 லட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த கைப்பை இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த ஒரு பையை வாங் குவதற்கு உண்மை யான ஆட்டோக்களை வாங்கி விடலாம் என இந்த பையை இணையத்தில் நெட்டிசன்கள் கிண்டல் அடித்து வருகின்றனர்.

லூயிஸ் உய்ட்டன் என்பது பிரான்ஸை தளமாக கொண்டு இயங்கி வரும் பிரபல பேஷன் பொருட்கள் தயாரிப்பு நிறுவ னமாகும்.

இந்த நிறுவனம், உலகெ வில் 50 நாடுகளில், 460 இற்கும் மேற்பட்ட கடைகளுடன் செயற்பட்டு வருகிறது.

2026 தொகுப்பிற்காக, பல் வேறு வகையான கைப்பை களை லூயிஸ் உய்ட்டன் நிறு வனம் அறிமுகப்படுத்தியுள் ளது. இதில், ஆட்டோ ரிக்சா வடிவிலான கைப்பை, இணையத்தையும் ஃபேஷன் உலகையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

மோனோகிராம் கேன்வாஸ் தோலில் வடிவமைக்கப்பட் டுள்ள இந்த கைப்பையின் விலையை கேட்ட பலரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

லூயிஸ் உய்ட்டனின் தயா ரிப்புகள் அனைத்தும், சிறந்த தரம் மற்றும் செயற்திறனுடன் உயர்தரப் பொருட்கள் கொண்டு, மிகுந்த அனுபவம் வாய்ந்த கைவினை கலைஞர்களால் தயாரிக்கப்படுகிறது என தக வல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# நானுஓயாவில் பள்ளத்தில் கவிழ்ந்த கார்

## 8 பேர் காயம்



(கொழும்பு)

நுவரெலியா - ஹற்றன் ஏ7 பிரதான வீதியில் காரொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத் திற்குள்ளானதில் 8 பேர் காய மடைந்துள்ளனர்.

நானுஓயா டெஸ்போட் பகுதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற் றுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

விபத்தில் காயமடைந்த வர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

மாத்தறையிலிருந்து ஹோர்டன் சமவெளி தேசிய பூங்காவில் அமைந்துள்ள உலக முடிவை பார்வையிட சென்றவர்களே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி)

# இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர்களை வழங்கிய இந்தியா!

(கொழும்பு)

இலங்கைக்கு ஒரு பில்லி யன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதி நிவாரண த்தை இந்தியா வழங்கியுள் ளது.

இந்திய ரிசர்வ் வங்கி மற் றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றுக்கு இடையேயான சிறப்புப் பரிமாற்ற ஏற்பாட்டின் கீழ், குறித்த நிதி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள நிலுவைத் தொகையைப் புதுப்பித்து, இந்த 1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி நிவாரணத்தை இந்தியா வழங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# வறட்சியான காலநிலை; நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

தற்போது நிலவும் வறட் சியான காலநிலை காரண மாக, நீரை முடிந்தவரை சிக் கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள் ளது.

நிலவும் வறட்சியான கால நிலையினால் முக்கிய நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் வேக மாகக் குறைந்து வருவதோடு நீரின் பயன்பாடு அதிகரித்து வருவதாகவும் எனவே அன் றாட பயன்பாட்டிற்கு போதுமான நீரை சேமித்து சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத் தியுள்ளது.

எனவே குடிநீர் விநியோ கம் குறைவாக இருப்பதால் அனைவரின் அத்தியாவசிய குடிநீர் மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண் டும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

அத்தியாவசியமற்ற நடவடி க்கைகளுக்கு தண்ணீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து அத்தியாவசிய அன்றாட நட வடிக்கைகளுக்கு மட்டுமே நீரை பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடி கால் சபை கேட்டுக்கொள்கி றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு 1939 என்ற துரித இலக்கத்திற்கு அழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (நி)

# பால் தேநீரின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பால் தேநீரின் விலை அதி கரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

அதன்படி, ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 10 ரூபா வால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதியின் விலை 100 ரூபாவாலும், ஒரு கிலோ பால்மா பொதியின் விலை 250 ரூபாவாலும் அதி கரிக்கப்பட்டதன் காரணமாக பால் தேநீரின் விலை அதி கரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்கா விதித்த வரிக்கு பதிலடி கொடுப்போம்

### பிரேசில் ஜனாதிபதி எச்சரிக்கை



(பிரேசில்)

அமெரிக்கா விதித்த 50% வரிக்கு பதிலடி கொடுக்கப்படும் என பிரேசில் ஜனாதிபதி லுலா டா சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரேசிலில் இருந்து வரும் பொருட்களுக்கு 50% வரி விதிக்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரேசில் ஜனாதிபதி லுலா டா சில்வா, தங்களது இறையாண்மை நிலையை வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பிரேசிலில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் 50 சதவிகித வரி விதிக்கப்படும் என்று நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது"

பிரேசில் ஒரு இறையாண்மை நாடு. நாங்கள் வெளியில் இருந்து வரும் எந்தவொரு கட்டுப்பாடு அல்லது அழுத்தத்தையும் ஏற்க மாட்டோம்.

பிரேசில் டிஜிற்றல் வலைத்தளங்களில் வரும் வெறுப்பு பேச்சு, இன வெறி, சிறுவர்கள் துஷ்பிரயோகம், மோசடிகள், மனித உரிமை மற்றும் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்களை ஏற்காது.

பிரேசிலில் பேச்சுரிமை என்பது எந்தவொரு வன்முறையையும் ஊக்குவிக்காது. பிரேசிலில் இயங்கும் அனைத்து நிறுவனங்களும், இங்கே இயங்குவதற்கு பிரேசில் சட்டத்தை பின்பற்ற வேண்டும்.

பிரேசில் உடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை கூற்றுகள் தவறானவை. கடந்த 15 ஆண்டுகளில், பிரேசில் உடனான அமெரிக்காவின் வணிக உபரி 410 பில்லியன் டொலர்கள் என்று அமெரிக்காவின் தரவுகள் காட்டுகின்றன.

அமெரிக்கா எங்கள் மீது புதிய வரிகளை விதித்தால், பிரேசில் அதற்கான பதிலடியை பிரேசிலின் பொருளாதார பரஸ்பர சட்டம் மூலம் கொடுக்கும்.

பிரேசில் இறையாண்மை, பரஸ்பர மரியாதை, மற்றும் உலகளாவிய உறவுகளில் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது ஆகியவற்றை மதிக்கிறது இவ்வாறு பதிவிட்டுள்ளார். (நி)

## உக்ரைன் போரில் ரஷ்ய...

## மனித உரிமை நீதிம...

(பாரிஸ்) ..................

உக்ரைனுக்கு எதிரான போரில், சர்வதேச விதிகளை ரஷ்யா மீறியுள்ளது என, ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஐரோப்பிய நாடான பிரான்சின் ஸ்ட்ராஸ்பேர்க் நகரில் உள்ள ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம், நேற்று முன்தினம் 2 முக்கிய வழக்குகளில், இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

உக்ரைன், நெதர்லாந்து ஆகியவை, ரஷ்யாவிற்கு எதிராகத் தொடுத்த வழக்குகளை இந்த நீதிமன்றம் விசாரித்து வந்தது.

அதிலொன்று, உக்ரைன் மீதான போர் ஆரம்பித்ததிலிருந்து முழு அளவிலான படையெடுப்பின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த வழக்கு.

மற்றொன்று, 2014 இல் 298 உயிர்களைப் பலி வாங்கிய மலேசியா ஏர் லைன்ஸ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட வழக்கு.

கடந்த 2014 இல் ஆம்ஸ்டர்டாமில் இருந்து கோலாலம்பூருக்குச் சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் விமா...
களுக்...
இடை...
ருந்த...
வீழ்த்...
நெதர்...
இருந்...

இற...
வழக்...
ரஷ்யா...



## சூரிய குளியலின் போது ட்ரம்ப் கொல்லப்படலாம்

### ஈரான் மிரட்டல்

(டெஹ்ரான்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அவரது வீட்டில் சூரிய குளியலில் ஈடுபடும் போது, ட்ரோன் தாக்குதலின் மூலம் கொல்லப்படுவது மிகவும் எளிதான ஒன்று என்று ஈரானின் மூத்த ஆலோசகர் ஜாவத் லரிஜானி கூறியிருப்பது உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் அமெரிக்க தலையீட்டினால் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போரின் போது, ஈரானின் அணுசக்தி நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. அந் நாட்டை ஜீரணிக்க முடியாத விடயமாக மாறியுள்ளது. எனவே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக ஈரான் தலைவர்கள் வெளிப்படையான மிரட்டல்களையும், கருத்துக்களையும் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், ஈரான் நாட்டு ஆட்சியாளரான அயதொல்லா அலி கமேனியின் மூத்த ஆலோசகர் ஜாவத் லரிஜானி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குறித்து பேசிய விடயம் தற்போது உலக நாடுகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர் கூறியதாவது புளோரிடாவின் உள்ள அவரது வீட்டில் ட்ரம்ப் நீண்ட நேரம் சூரிய குளியல் போட முடியாது.

ஏனெனில், அவர் மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்படலாம். இது மிகவும் எளிமையான விடயம், என்று தெரிவித்தார். (நி)



இ...
நா...



(வி...
கா...
அர்...
நாடுக...
மோடி...
நாடா...
ளார்.

நமி...
தரை...
அந்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## பா குற்றவாளி
## ன்றும் தீர்ப்பு!



ானம், ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதி நக்கும், உக்ரைன் படைகளுக்கும் டையே சண்டை நடந்து கொண்டி ந்தபோது கிழக்கு உக்ரைனில் சுட்டு த்தப்பட்டது. அந்த விமானத்தில் 196 தர்லாந்து பயணியர் உட்பட 298 பேர் ந்தனர்.

இந்தநிலையில், குறித்த இரண்டு க்குகளிலும், சர்வதேச விதிகளை யா மீறியுள்ளதாக, ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் கூறியுள்ளது. எனினும், கடந்த, 2022 இல் நீதி மன்றத்தின் நிர்வாக அமைப்பிலிருந்து, ரஷ் யாவை நீக்கப்பட்டு விட்டது.

அதனால் தற்போதைய உத்தரவுகள், ரஷ்யாவைக் கட்டுப்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி)

## இஸ்ரேலின் நடவடிக்கைகளை விமர்சித்த ஐ.நா அறிக்கையாளர்

### தடைகள் விதித்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

காசா மீதான இஸ் ரேலின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்து வந்த ஐக்கிய நாடுகள் அறிக்கையாளர் பிரான் செஸ்கா அல்பெனிசிற்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள் ளது.

அமெரிக்கர்கள் இஸ் ரேலியர்களிற்கு எதிராக ஐசிசி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளிற்கு ஆத ரவளிக்கும் விதத்தில் செயற்பட்டமைக்காக பிரான்செஸ்காவிற்கு எதி ராக தடைகளை விதிப் பதாக அமெரிக்க இரா ஜாங்க செயலாளர் மார் க்கோ ரூபியோ தெரிவித் துள்ளார்.

ஐ.நா அறிக்கையாள ராக செயற்படுவதற்கு பிரான்செஸ்கா பொருத்த மற்றவர் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் தேடப்படும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு தங்களது வான் பரப் பினை பயன்படுத்துவது ஏன் என இத்தாலி கிரேக்கம் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தெளி வுபடுத்த வேண்டும் என ஐ.நாவின் பாலஸ் தீனத்திற்கான விசேட அறிக்கையாளர் பிரான் செஸ்கா அல்பெனிஸ் வேண்டுகோள் விடுத்தி ருந்தார்.

ஐசிசி தேடும் பெஞ் சமின் நெதன்யாகு விற்கு தங்கள் வான் பரப்பை பயன்படுத்துவ தற்கும் பாதுகாப்பாக பயணிப்பதற்கும் இத்தாலி பிரான்ஸ் கிரேக்கம் ஆகிய நாடுகள் அனுமதியளி த்தது ஏன் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள அவர் நெதன்யாகுவை கைது செய்ய வேண்டிய கடப் பாட்டை இந்த நாடு கள் கொண்டுள்ளன என தெரிவித்திருந் தார்.

சர்வதேச சட்ட ஒழுங்கை மீறும் ஒவ் வொரு அரசியல் நடவடிக் கையும் அதனை பலவீ னப்படுத்தும் அவர்க ளுக்கும் அனைவருக் கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை பிரான்ஸ் கிரேக்க இத்தாலி மக்கள் அறிந்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்திருந் தார். (நி)



## இந்தியப் பிரதமர் மோடிக்கு நமீபியா நாட்டின் உயரிய விருது



(விண்ட்ஹோக்)

கானா, ட்ரினிடாட் அண்டு டொபாகோ, ர்ஜென்டினா, பிரேசில் ஆகிய டுகளுக்குச் சென்ற பிரதமர் நரேந்திர ாடி, அடுத்த கட்டமாக ஆபிரிக்க டான நமீபியாவுக்கு சென்றுள் ர்.

நமீபியாவின் விண்ட்ஹோக்கில் ரையிறங்கிய பிரதமர் மோடியை ந்நாட்டு ஜனாதிபதி நெட்டம்போ நந்தி எண்டைட்வா நேரில் சென்று வரவேற் றார்.

பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு பிரதமர் மோடி உற்சாகமாக மேளம் கொட்டி மகிழ்ந்தார்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடிக்கு அந் நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

இது பிரதமர் மோடிக்கு அளிக்கப்படும் 27ஆவது வெளிநாட்டு விருது ஆகும்.

அதைத் தொடர்ந்து அந் நாட்டு பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, உலகின் மிகப்பெரிய வைர உற்பத்தியாளர் களில் நமீபியாவும் ஒன்று.

இந்தியாவில் மிகப் பெரிய வைர மெருகூட்டல் தொழில் உள்ளது.

அதுவும் எனது சொந்த மாநிலமான குஜராத்தில். வரும் காலங்களில் இரு நாடுகளிடையே உள்ள நட்பு இந்த வைரங்களைப் போலவே பிரகாசிக்கும் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார். (நி)

## குஜராத்தில் இடிந்து விழுந்த பாலம் ஆற்றுக்குள் கவிழ்ந்த வாகனங்கள்!

### 9 பேர் உயிரிழப்பு



(டில்லி)

குஜராத்தின் வதோத ராவில் வதோதரா மற்றும் ஆனந்த் நகரங்களை இணைக்கும் காம்பிரா பாலம் நேற்று காலை இடிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, பாலத்தில் பயணித்த 5 வாகனங்கள் ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒன்பது பேர் உயிரிழந் தனர்.

அதேநேரத்தில் பலர் மீட்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

கம்பீரா பாலம் கடந்த ஆண்டுதான் பழுது பார்க் கப்பட்டதாகவும், பாலத்தில் போக்குவரத்து நெரிச லைக் கருத்திற் கொண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு மாநில முதலமைச் சர் ரூ.212 கோடி மதிப் பிலான புதிய பாலத்திற்கு ஒப்புதல் அளித்ததாகவும் உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர். எவ்வாறெ னினும், விபத்தின் பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுக்கள் மீட்புப் பணிகளை முன் னெடுத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 நாட்களில்

## 36 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

# இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

2025 ஜூலை மாதத்தின் முதல் ஆறு நாட்களில் 36,002 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு இதுவரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 120,446 ஆக உள்ளது.

ஜூலை மாதத்தின் முதல் 6 நாட்களில் இந்தியாவில் இருந்து 8,053 பயணிகள் வந்துள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்திலிருந்து 3,562 சுற்றுலாப் பயணிகள், அவுஸ்திரேலியாவிலிருந்து 2,674 பேர் மற்றும் சீனாவிலிருந்து 2,362 பேர் நாட்டிற்கு வந்துள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி-பா-70 1/4
உயரம்: 6"
தகைமை/தொழில்: BSc, Executive officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15635

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:சதயம்
உயரம்:5'5"
தகைமை/தொழில்- A/L, கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15636

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-8
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSc, SO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15634

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-14 1/2
உயரம்:5'9"
தகைமை/தொழில்- A/L, Supervisor
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/15640

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி-பா-74
7இல் சூரிசெவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: IT, IT Officer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15643

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா-28 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc,TutionTeacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/15678

பிறப்பு-1989-RC
நட்சத்திரம்-மிருகசீரிடம்
கி-பா-65
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L. Cleark
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/15679

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
7இல்செவ்
கி.பா -18 1/2
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BSc,MSc,(Aus)
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15680

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - MBBS(final year)
எதிர்பார்ப்பு: Doctor,Engineer
தொ.இ: G/15682

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:பூரம்
7இல்செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்-BSc, Accountant (London)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15686

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 411

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அகிம்சையின் ஆற்றல்!

ஒரு தேசத்து ராஜாவுக்கு புத்திரபாக்கியம் வாரிசு இல்லை! இல்லாததினாலே வழக்கப்படி பட்டத்து யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து வீதிவழியாக அழைத்துக்கொண்டு வந்தார்கள். அந்தப் பட்டத்து யானை யார் கழுத்திலே மாலையைப் போடுகிறதோ அவர் தான் ராஜா. அவருக்குதான் முடி சூட்ட வேண்டும்!

யானை மாலையோட வந்துக்கொண்டிருக்கிறது. வழியிலே ஒரு துறவி வந்துகொண்டிருந்தார். எல்லாத்தையும் துறந்தவர் யானைக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவர் கழுத்திலே மாலையைப் போட்டது. அவ்வளவுதான்.

துறவியை சகல அரச மரியாதையோடும் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். எதற்கு இப்படியெல்லாம் செய்கிறார்கள் அவருக்கு ஒன்றும் புரியவில்லை!

"என்னை ஏன் இப்படி இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"சுவாமி! இப்போது தாங்கள்தான் இந்த நாட்டுக்கு மன்னர். பட்டத்து யானை உங்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. இது இறைவனின் தீர்ப்பு!" என்றார் அமைச்சர்.

"எனக்கு இந்த அரச பதவி தேவையில்லை. நான் துறவி!" என்றார் அவர்.

"சுவாமி, இது இறைவனின் திருவுள்ளம். தயவு செய்து குடிமக்களின் நலன் கருதியாவது இந்த அரச பதவியை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்றார்.

வேறு வழியில்லாமல் துறவி சம்மதித்தார். அரச பதவியை ஏற்றுக் கொண்டார்.

தாமரை இலைத்தண்ணீர் மாதிரி இவர் எதிலேயும் பற்றுதல் கொள்ளாமல் ராஜா கவனித்துக் கொண்டு வந்தார் வேலைகளை இப்படி ஒரு ராஜா இருந்தால் பக்கத்து நாட்டு அரசன் சும்மா இருப்பானா? உடனே படையெடுத்துக்கொண்டு வந்து விட்டான் சண்டை போடுவதற்கு. அரண்மனையிலே இருந்த துறவி மன்னனிடம் அமைச்சர்கள் ஓடிவந்து விடயத்தைச் சொன்னார்கள்.

"இது மாதிரி அந்நிய தேசத்து அரசன் நம் நாட்டு மீது படையெடுத்து வந்திருக்கிறான்!" என்றார்கள்.

"அந்த மன்னன் நம் நாட்டு மீது ஏன் போர் தொடுத்திருக்கிறான்? நாம் அவனுக்கு என்ன கெடுதல் செய்தோம்?" என்று கேட்டார் துறவி.

"அரசே! அவன் நம் மேல் போர் தொடுத்திருப்பதற்கு எந்தவித காரணமும் இருக்கின்றதாகத் தெரியவில்லை!

அவனுடைய படைகள் நம் நாட்டு எல்லைக்குள்ளே புகுந்து விட்டது! தயவு செய்து அவர்களை எதிர்த்துப்போர் செய்ய எங்களுக்கு உத்தரவு கொடுங்கள்!" என்றார்கள்.

"வேண்டாம்! அது வேண்டாம்! அவங்களை எதிர்க்க வேண்டாம். யாராக இருந்தாலும் சண்டை போடுவது தகாத செயல்! அமைதியாக இருங்கள். அது போதும்!" என்றார் துறவி.

"என்ன இது இப்படி சொல்கிறாரே" என்று நினைத்தார்கள்! போரிடாமலும் இருந்து விட்டார்கள்! என்ன செய்ய முடியும். படையெடுத்துக்கொண்டு வந்த மன்னன் பார்த்தான்.

என்ன இது, யாருமே எதிர்த்துச் சண்டை போட வரவில்லையே என்று நினைத்தான். பேசாமல் "கிடுகிடு என்று" அரண்மனைக்கு உள்ளே வந்துவிட்டான். துறவியைப் பார்த்தான்.

"அரசே! உங்கள் கூட சண்டை போடுவதற்காக நான் வந்திருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

"என்னோடு சண்டை போட்டு உனக்கு என்ன ஆகப்போகிறது? எதற்காக என்னோடு சண்டை போட வேண்டும் என்றான்?" துறவி.

"நான் உங்கள் தேசத்தைப் பிடிக்கப்போகிறேன்!" என்றான் அவன்.

இதைக் கேட்டதும் துறவி "கடகட" என்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

"இந்த தேசம் உனக்கு வேண்டும் அவ்வளவுதானே. இதற்காக நீ ஏன் என்னோடு போராட வேண்டும்? இதோ இப்பொழுது முதல் நீதான் இந்த தேசத்திற்கும் மன்னன். நானோ, அன்றைக்கும் துறவி. இன்றைக்கும் துறவி வா வந்து இந்த சிம்மாசனத்திலே உட்கார்!" என்றார் சொல்லிவிட்டு அவர் எழுந்திருந்தார் விலகி வந்தார். சண்டை போட வந்த மன்னனுக்கு வெட்கமாகப் போனது! துறவியின் காலிலே பொத்து என்று விழுந்தான்.

ஐயா, நான் தப்பு செய்துவிட்டேன். உங்கள் பெருந்தன்மை தெரியாமல் போர் செய்ய வந்து விட்டேன் மன்னித்து விடுங்கள்! என்றான். அதுமட்டுமில்லை அரசே! என்னுடைய இராஜ்யத்தையும் உங்கள் பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன். இருநாடுகளுக்கும் இனிமேல் நீங்கள்தான் மன்னர். நான் உங்கள் அடிமை. என்னை ஆசிர்வாதம் செய்யுங்கள்!" என்றான்.

கத்தியின்றி - இரத்தமின்றி - யுத்தமின்றி - அந்தத்துறவி இரு நாடுகளுக்கும் மன்னர் ஆனார். இதுதான் அகிம்சையின் வலிமை - தியாகத்தின் பெருமை. இதைப் புரிந்துகொள்ளாமல் போனதினாலேதான் இன்றைக்கு உலகத்திலே குழப்பம். ராஜாக்களிலே வேறு சில ரகமும் உண்டு. ஒரு ராஜா அரண்மனையிலே உட்கார்ந்திருந்தார்.

அமைச்சரும் தளபதியும் வேகமாக ஓடி வந்தார்கள். "அரசே அந்நிய தேசத்து மன்னன் நம்மோடு சண்டை போடுவதற்கு படையெடுத்து வந்துகொண்டிருக்கிறான். என்ன செய்யலாம்?" "உடனே என்னைப் பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோங்கள்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதன் மூலமே டெங்கு நோய்களை கட்டுப்படுத்த முடியும்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

(சாவகச்சேரி)

நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதன் மூலமே நுளம்பினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியாக கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் கடந்த புதன்கிழமை அனைத்துப் பாடசாலைகளையும் மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பூநகரி மத்திய கல்லூரியில் பொலிஸார், சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து மேற்கொண்ட நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையில் பரவிவரும் டெங்கு, சிக்குன்குனியா நோய்களைக் கட்டுப்படுத்த வினைத்திறனானதும், எளிமையானதுமான வழி நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதேயாகும்.

மழைகாலங்களில் மட்டுமல்ல மழை இல்லாத போதும் நீரேந்தக்கூடிய நுளம்பு பெருகும் கொள்கலன்களை வெளியில் விடக்கூடாது. வைரஸினால் ஏற்படும் டெங்கு, சிக்குன்னியாவைப் பரப்பும் காவிகளான நுளம்புகள் காலை, மாலையிலேயே வீட்டுக்கு வெளியில் அதிகளவில் கடிக்கின்றன. நோயாளியைக் கடித்த நுளம்பு ஆரோக்கியமான வரைக் கடிக்கும் போது நோய்க்குரிய வைரஸ் கடத்தப்பட்டு அவர் நோயாளியாக மாறுவார்.

காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டால் விரைந்து தகுந்த வைத்தியரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

இந்த நுளம்புகள் "ஈடிஸ்" வகையைச் சேர்ந்தவை. கறுப்பு நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளுடையவை. எனவே நுளம்பு பெருகும் இடங்களான நீரைத் தேக்க வைக்கும் தொட்டிகளை வாரமொரு முறை உட்சுவரை உரஞ்சிக் கழுவி நீர் மாற்ற வேண்டும். உயரமாகவுள்ள நீர்த்தொட்டிகளினுள் நுளம்புகள் உட்புகாதவாறு தடைசெய்யப்பட வேண்டும். கூரைப் பீலிகளைக் கிரமமாகச் சுத்தப்படுத்த வேண்டும். ரயர், சிரட்டை, இளநீர்க் கோம்பை, பொலித்தீன் பிளாஸ்டிக் மற்றும் கைவிடப்படும் கொள்கலன்களை நீர்தேங்காத இடங்களில் சேகரிக்க வேண்டும். எனவே கழிவுகளால் மாசுபடாத அழகான சூழலாக எமது பாடசாலைகளைப் பேணி நோய்களின் ஆபத்துக்களைத் தவிர்த்து ஆரோக்கியமான நல்ல பிரஜைகளாக வாழ்வோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (8-30)

# திருநாவுக்கரசர் சிலை உடைப்பு!

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் பாடசாலை வளாகத்தில் இருந்த நாவுக்கரசர் சிலை உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நாயனார் குருபூஜை நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றிருந்த நிலையில் இரவு மேற்படி சிலை உடைக்கப்பட்டிருப்பதாக பாடசாலை சமூகத்தினரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இதே சிலை இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டு பாடசாலை நிர்வாகத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது மீண்டும் உடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-30)

# யாழ்.முனீஸ்வரன் வீதியை பார்வையிட்ட முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப்புறம் முனீஸ்வரன் வீதியில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை ஆராயும் முகமாக யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தலைமையிலான குழுவினர் விசேட கள விஜயம் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டிருந்தனர்.



இவ் விஜயத்தின் போது முனீஸ்வரன் வீதியில் நடைபாதையில் முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் தரித்து நிற்பதனால் ஏற்படும் பிரச்சினைகள், அனுமதி இன்றி மேற்கொள்ளப்பட்டு வந்த நடைபாதை வியாபார நடவடிக்கைகளால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவ் வீதியில் காணப்படும் மாநகர வாய்க்கால்களில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அந்த வகையில் அனுமதி இன்றிய வர்த்தகம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு போக்குவரத்து தடைகள் நீக்கப்பட்டது, முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் போக்குவரத்து பொலிஸாரினால் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டது. வடிகால்கள் துப்பரவு செய்வதற்கு மாநகர பொதுச் சுகாதார பொறியியற் பிரிவிற்கு உடனடி பணிப்புரை முதல்வரினால் பிறப்பிக்கப்பட்டது. மேலும் பொது நடை பாதையில் வாகனங்கள் தரித்து நிற்காத வண்ணம் உடனடியாக வீதித் தடை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் மேற்படி விஜயத்தில் யாழ் மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், வட்டார மாநகரசபை உறுப்பினர், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர பொதுச் சுகாதார பொறியியற் பிரிவு அதிகாரிகள், மாநகர பிரதான வருமானவரி பரிசோதகர் உள்ளிட்ட பலர் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி)




சுஜேனி




மிதுளா





மாதுரி




நிதுஷன்




வதன்




கதிர்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 818





பழுவேட்டரையர் முதலில் சமாளித்துக் கொண்டு, "கோமகனே! இந்த சோழ சாம்ராஜ்யத்திலுள்ள லட்சோப லட்சம் ஜனங்களின் அன்பு நிறைந்த உள்ளங்களே தங்களையும், தங்கள் தந்தையையும் சிறைப்படுத்தியிருக்கின்றன.தனியாகச் சிறை வைப்பது எதற்கு?" என்றார்.

"இளவரசே! தங்களுடைய தரிசனத்துக்காக வந்திருக்கும் பெருந்திரளான மக்கள் இந்தச் சிறிய குடிசைக்குள் புகுந்தால் என்ன ஆவது? அவர்கள் வெளியில் நிற்கும்போது அக்கம் பக்கமுள்ள தோப்புகள் எல்லாம் குரங்குகள் அழித்த மதுவனம் போல் ஆகிவிட்டன. ஜனக் கூட்டம் கலைந்ததும் தங்களுடன் வந்த பரிவாரங்களை உள்ளே அழைத்து வருகிறோம். அது வரையில் தங்களுக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்ய இங்கே பணியாளர் பலர் இருக்கிறார்கள்" என்றார் சம்புவரையர்.

இச்சமயம் கோட்டை வெளி வாசலில் ஜனங்களின் ஆரவாரம் அதிகமானது போலக் கேட்டது. கரிகாலன் கந்தமாறனிடம், "முன் வாசல் மேல்மாடிக்குப் போக வழி எங்கே?" என்று கேட்டான்.

கந்தமாறன் மாடிப்படிகள் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டியதும் கரிகாலன் அந்தப் பக்கம் நோக்கி விடுவிடுவென்று நடந்து சென்றான், கந்தமாறனும், வந்தியத்தேவனும், பார்த்திபேந்திரனும் உடன் சென்றார்கள்.

சம்புவரையர், பழுவேட்டரையரைப் பார்த்து, "இது என்ன? வழியோடுபோகிற சனியனை விலைக்கு வாங்கியது போல் வாங்கிக் கொண்டோமே? இவனுடைய மூளை சரியாயிருப்பதாகவே தோன்றவில்லையே? சின்னப் பிள்ளைகளின் பேச்சைக் கேட்டு இந்தக் காரியத்தில் தலையிட்டோம்!" என்றார்.

"அப்படி என்ன மோசம் வந்துவிட போகிறது? காரியம் நடந்தால் நடக்கட்டும் நடக்காவிட்டால் போகட்டும்" என்றார் பழுவேட்டரையர்.

"காரியத்தைப் பற்றி நான் சொல்லவில்லை. நம் வீட்டில் இருக்கும்போது ஏதாவது ஏடாகூடமாக நடக்கக் கூடாது அல்லவா? நிமித்தம் ஒன்றும் சரியாக இல்லை. அவனோ மதம் பிடித்த யானையைப் போல் இருக்கிறான். முகத்தின் கடுகடுப்பையும், நாக்கில் விஷத்தையும் பார்த்தீர்கள் அல்லவா?"

"சில நாள் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருக்க வேண்டியது தான். அந்தப் பல்லவன் பார்த்திபேந்திரன் அவனைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவியாயிருப்பான். இன்னொரு துஷ்டச் சிறுவன் பின்னோடு வந்திருக்கிறானே, அவனைத்தான் எனக்குப் பிடிக்கவில்லை. அவன் ஒற்றன் என்று கூட எனக்குச் சந்தேகம். முன்னால் நாம் கூட்டம் போட்ட அன்றைக்குகூட அவன் இங்கு வந்திருந்தான் அல்லவா? நேற்று மாலை இந்தக் கோட்டைக்கு வெளியில் மரத்தின் மறைவில் நின்றிருந்தவனும் அவன் தான்!"

"அவன் என் மகனுடைய சிநேகிதன் அல்லவா? ஆகையால் அவனைப் பற்றிப் பயமில்லை. இப்போது எதற்காகப் பெண்கள் இருக்கும் இடத்துக்கு அவசரமாக போகிறார்கள்? நாமும் போவோமா?" இச்சமயம், மச்சுப்படி வரையில் போன பார்த்திபேந்திரன் திரும்பி வந்து, இரு பெரும் குறுநில மன்னர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தை அணுகினான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புதிய வனம் உருவானது



(நேற்றைய தொடர்ச்சி)

தம்பி ஏன் அழுகிறாய்? என்று கேட்டாள். திடீரென்று ஒரு அழகான பெண் தன்னிடம் வந்து பேசியதை கேட்டவுடன் குருவாயூரப்பனுக்கு அச்சம் வந்து விட்டது.உடனே தேவதை பயப்படாதே. நான் ஒரு வனத் தேவதை. இந்த காட்டு வழியாக பறந்து சென்று கொண்டிருந்தேன். நீ அழுது கொண்டு உட்கார்ந்திருப்பதை பார்த்து இறங்கி வந்திருக்கிறேன். நீ எதற்காக அழுது கொண்டிருக்கிறாய்?

கொஞ்சம் பயம் தெளிந்த குருவாயூரப்பன், தேவதையிடம் தன் தகப்பன் உடல் நலம் இல்லாமல் வீட்டில் இருப்பதையும், அதனால் தான் விறகு பொறுக்க வந்ததையும் சொன்னான். ஆனால் விறகு கட்டை தூக்க முடியாமல் சிரமமாய் இருப்பதாக கூறினான்.

அவன் மேல் பரிதாபப்பட்ட தேவதை கவலைப்படாதே நீ வீட்டுக்கு போ, இந்த விறகு கட்டை உன் வீட்டிற்கு நான் கொண்டு வந்து தருகிறேன் என்றது. குருவாயூரப்பன் சிறுவனாய் இருந்தாலும் நல்ல உள்ளம் படைத்தவன், வேண்டாம் நீங்கள் ஏன் எங்களுக்காக சிரமப்பட்டு தூக்கி வர வேண்டும் என்றான்.

தேவதை சிரித்தாள். நான் தூக்க மாட்டேன், என் மந்திர சக்திதான் அந்த கட்டை தூக்கி வந்து உன் வீட்டில் போட்டு விடும். உன்னுடைய நல்ல உள்ளத்துக்காக நான் ஒன்று செய்கிறேன். தினமும் நல்ல விறகு கட்டை உன் வீட்டில் கொண்டு வந்து போட்டு விடுகிறேன். நீங்கள் அதை விற்று பிழைத்துக்கொள்ளுங்கள் என்றது. குருவாயூரப்பன் தேவதையிடம் அதெப்படி உழைக்காமல் நீ கொண்டு வரும் விறகை நாங்கள் விற்று அனுபவிப்பது. இந்த கேள்வியை கேட்டவுடன் தேவதைக்கு அவன் மேல் பாசம் ஏற்பட்டு விட்டது. உன்னுடைய எண்ணம் நல்லது. வேண்டுமென்றால் நான் செய்த உதவிக்கு பதிலாக நீ ஒன்று செய்ய வேண்டும். இது போல் இன்னும் புதிய வனங்களை உருவாக்க வேண்டும். அதற்காக வாரம் ஒரு விதை நட வேண்டும். எங்கெங்கு காலி இடம் இருந்தாலும் அங்கெல்லாம் விதை நட்டு தண்ணீர் ஊற்றி பாதுகாக்க வேண்டும்.

குருவாயூரப்பன் வீட்டிற்கு வந்தான். எதுவும் கொண்டு வராமல் சும்மா வருவதை பார்த்த அவன் அம்மாவும், அப்பாவும் பையனுக்கு ஏதாவது ஆகி விட்டதோ என்று பயந்தனர். குருவாயூரப்பன் அம்மாவிடம் எல்லா விடயங்களை சொல்லி முடிக்கவும் அங்கு விறகுக் கட்டு வந்து சேரவும் சரியாக இருந்தது. அது மட்டுமல்ல அந்த கட்டுக்குள் புதிதாய் நிறைய விறகுகள் சேர்த்து கட்டப்பட்டு இருந்தது.

அவன் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் கட்டை பிரித்து தூக்க முடிந்த அளவு அம்மாவும், மகனும் தூக்கிக் கொண்டு ஊருக்குள் கொண்டு சென்றனர். விறகு சீக்கிரம் விற்று தீர்ந்து விட்டது. மகிழ்ச்சியுடன் அங்கேயே வீட்டுக்கு தேவையான சாமான்கள் வாங்கி வந்தனர்.

தேவதையிடம் சொல்லியிருந்தபடி குருவாயூரப்பனோ, இல்லை அவன் குடும்பத்தாரோ வாரம் ஒரு விதை நட்டு பராமரித்து வந்தனர். தேவதையும் தினம் அவர்கள் வீட்டில் ஒரு கட்டு விறகு கொண்டு வந்து போட்டது இதனால் அவர்கள் ஊரிலேயே ஒரு விறகுக்கடையும் வைத்து அதன் மூலம் வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டனர்.வசதிகள் வந்தபோதும் மறக்காமல் இவர்கள் வாரம் ஒரு விதை நட்டு அதை பராமரித்து வந்ததால், புதிய வனங் கள் ஊரை சுற்றி உருவாகின.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையும் நேர்மையும் உள்ளவனாக வாழ்ந்தால் அஞ்சா நெஞ்சம் கொண்டவனாக வாழலாம்.
– சுபாஸ் சந்திர போஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அரசின் தயக்கம் ஏன்?

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான முழு விபரமும் 2025 ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் என இந்த நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

எனினும் 2025 ஏப்ரல் 21ஆம் திகதி கடந்து சென்ற போதிலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

2025 ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர், குண்டுத் தாக்குலின் சூத்திரதாரிகளை வெளிப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையிலேயே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்படி உறுதிமொழியை வழங்கினார்.

எனினும் அவர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத அளவில் அவருக்கு ஏதோவொரு தடை இருந்துள்ளது.

அதேநேரம் அண்மையில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர; அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது எனக் கூறிவிட்டு, அதன் விரிவாக்கத்தை வெளிப்படுத்தாமல் தவிர்த்துக் கொண்டார்.

இங்குதான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்ற உண்மையை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நிறுதிட்டமாகத் தெரிந்து வைத்துள்ளார் என்பது உறுதியாகின்றது.

இருந்தும் சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர்களைச் சுட்டிக்காட்டுவதில் அவருக்கு ஏதோவொரு வகையில் தடை உள்ளதென்பதை ஊகிக்க முடியும்.

நிலைமை இதுவாக இருக்கையில், நேற்று முன்தினம் (09) பாராளுமன்றத்தில் உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு விடயங்களை முன்வைத்தார்.

அதில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை, அப்போது மட்டக்களப்புச் சிறையில் இருந்த பிள்ளையான் அறிந்திருந்தார் எனக் கூறியுள்ளார்.

இங்கு சிறையில் இருந்த பிள்ளையான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற இருப்பதை அறிந்திருப்பினும் அவர் அதனை எங்ஙனம் வெளிப்படுத்த முடியும் என்ற கேள்வி எழும்.

இங்குதான் குறித்த தாக்குதலை பிள்ளையான் அறிந்திருந்தார் என்பதைக் கூறுவதன் மூலம், அவருக்கும் சிங்களத் தரப்பில் யாருக்ஞ்ரீ மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் வகையில் அந் தத் தகவலை அமைச்சர் ஆனந்த விஜேபால வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் (09) பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க; ராஜபக்ஷக்களின் அரசியலுக்காகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அரங்கேற்றப்பட்டது எனத் தெரிவித்தார்.

இவ்வாறு அமைச்சர்கள் கூறுகின்ற போதிலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை பகிரங்கப்படுத்துவதில் அநுர அரசு தயங்குகிறது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

# மின்சாரசபை திருத்தச் சட்டமூலத்தால் எவருக்கும் எந்தவிதப் பயனும் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய மின்சாரசபைத் திருத்தச் சட்டம் எவருக்கும் நன்மை தராது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துரைத்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்.பி.பெரேரா மேலும் தெரிவித்ததாவது,

மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக் கூடியவாறு புதிய மின்சார சபைச் சட்டம் தயாரிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தலில் வாக்குறுதியளித்திருந்தார்.

ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளனர். திருத்தப்பட்ட சட்டமூலம் மின் சாரசபைக்கோ, அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை.

மின்சார சபையை பங்குகளாகப் பிரித்து அவற்றை சிறிய பிரிவுகளின் கீழ் உள்ளடக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் அரசாங்கத்தால் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது அந்த மின்சாரசபைச் சட்டத்தை மீண்டும் திருத்துவதற்கு அநுர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய மின்சாரசபைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படுமென ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது.

தேசிய சொத்துக்களைப் பாதுகாக்கும் அதேவேளை, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக் கூடியவாறு குறித்த சட்டம் தயாரிக்கப்படும் என்று அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளது.

தற்போதைய அரசாங்கம் முன்வைத்துள்ள சட்டமூலம் தொடர்பில் மேல் நீதிமன்றத்தினால் கடுமையான திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

திருத்தப்பட்ட சட்டமூலம் மின்சார சபைக்கோ அதன் ஊழியர்களுக்கோ அல்லது பாவனையாளர்களுக்கோ எந்த வகையிலும் நன்மை பயக்கக் கூடியதாக இல்லை.

இது தொடர்பில் நாம் நீதிமன்றத்திலும் பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களிலும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என்றார். (ம-7)

# இராணுவத்தினர் ஒரு பாவமும் அறியாதவர்கள் புலிகளே கொலைக் குற்றவாளிகள்

## செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சாகர

(கொழும்பு)

செம்மணியில் புதைக்கப்பட்டவர்களை இராணுவம் கொலை செய்யவில்லை.

மாறாக புலிகளே தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர் எனப் பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

போர்க்காலத்தில் யாழில் புலிகளின் பயங்கரவாதத்தை அனுமதிக்காத, சமாதானத்தைக் கோரிய மக்களைப் புலிகளே கொன்று குவித்தனர்.

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களுள் பலர் புலிகளாலேயே கொலை செய்யப்பட்டனர்.

இராணுவம் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இவ்வாறிருக்கையில் அரசியல் இலாபம் கருதி செம்மணி தொடர்பில் இராணுவத்தின் மீது கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன என்றார். (ம-7)

# மலேசிய நாட்டுப் பணித்துறைகளில் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

## மலேசியப் பிரதமரிடம் விஜித ஹேரத் கோரிக்கை

(கொழும்பு)

58வது ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க மலேசியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று கோலாலம்பூரில் மலேசியப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது,

இரு தலைவர்களும் நீண்டகால இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது, குறிப்பாக தொழிலாளர் துறையில் கவனம் செலுத்துவது குறித்தும் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, மலேசியாவில் உள்ள பல்வேறு துறைகளில் இலங்கை தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்குமாறு வெளிவிவகார அமைச்சர் மலேசியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார். (ம-7)

# குருநாகலில் துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது

குருநாகலில் பொல்பித்திகமப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமையவே குறித்த தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் அரங்கலப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர் என விசேட அதிரடிப்படையினரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ள நிலையில் குறித்த சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொல்பித்திகமப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

# உடைமையில் ஐஸ் போதை கிண்ணியாவில் பெண் கைது

கிண்ணியாவில் விற்பனை செய்வதற்காக ஐஸ்போதைப்பொருளை தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த கிண்ணியா - மகரூப் நகர் பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதான பெண் ஒருவர் கிண்ணியா குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளாரெனவும் விசாரணைகளின் பின் சந்தேகநபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் கிண்ணியா குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 11

சொக்கன்

அபுஹாசன் எரிகா சாம்பர்ஸ் நெருங்கிப் பழக ஆரம்பித்த பிறகு அவருடைய தினசரி நடவடிக்கைகள் அனைத்தும் உடனுக்குடன் மொசாட்டுக்குச் சென்று சேர்ந்தது. இதன் அடிப்படையில் புதிய திட்டங்கள் தயார் செய்யப்பட்டன.

*1979* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் திகதி அபுஹாசன் வழக்கமாகப் பயணம் செய்கிற சாலையில் ஒரு வோல்ஸ்வாகன் கார் வந்து நின்றது. அதில் நூறு கிலோ எடையுள்ள வெடிபொருட்களைப் பதுக்கிவைத்திருந்தது மொசாட்.

இந்தக் காரை வெடிக்கச் செய்வதற்கான ரிமோட் கன்ட்ரோல் பக்கத்திலேயே இன்னொரு வீட்டில் இருந்தது. பட்டனில் விரலை வைத்து அழுத்தியபடி அவர்கள் அபுஹாசனுக்காகக் காத்திருந்தார்கள்.

அபுஹாசனுக்குக் கொஞ்சமாவது உயிர் பயம் இருந்திருந்தால் அவர் தினந்தோறும் ஒரே சாலைவழியே பயணம் செய்திருக்கமாட்டார். வேண்டுமென்றே காரை மாற்றி ரூட்டை மாற்றி சந்திப்புத் திட்டங்களை மாற்றி ஏதாவது ஒரு வழியில் தன்னுடைய எதிரிகளைக் குழப்பப் பார்த்திருப்பார்.

ஆனால் அவருக்கு அந்தப் பயமோ பதற்றமோ சுத்தமாக இல்லை நான் நிரந்தரமானவன், அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்று பாட்டுப் பாடிக்கொண்டு அதே வழியில் வந்து சேர்ந்தார்.

அப்புறம் என்ன? சரியாக அபுஹாசனின் கார் அந்தவோல்ஸ்வாகனைக் கடக்கும்போது, ரிமோட் வழியாக குண்டு வெடிக்கப்பட்டது. அபுஹாசன் அவருடைய பாதுகாவலர்கள், பக்கத்தில் இருந்த அப்பாவிகள் என்று மொத்தம் ஒன்பது பேர் இறந்துபோனார்கள்.

அடுத்த சில மணி நேரங்களுக்குள், எரிகா சாம்பர்ஸ், மற்ற மொசாட் ஏஜென்ட்கள் சத்தமில்லாமல் பெய்ரூட்டிலிருந்து வெளியேறிவிட்டார்கள். லெபனான் காவல்துறை பாலஸ்தீன விடுதலைப் போராளிகள்விழித்துக்கொண்டு துப்புத்துலக்க ஆரம்பிப்பதற்குள் எல்லாத் தடயங்களும் சுத்தமாக அழிக்கப்பட்டுவிட்டன.

ரொம்ப நாளைக்குப் பிறகு இஸ்ரேல் மொசாட் வட்டாரங்களில் அன்றைக்குத் திருவிழாக் கோலம் ம்யூனிக் பழிவாங்கல் லிஸ்டில் கடைசியாக மிச்சமிருந்த அபுஹாசனின் பெயருக்கு எதிராக டிக்போட்டுக் கொண்டாடினார்கள்.

மொசாடுக்கு மட்டுமில்லை, ஒட்டுமொத்த இஸ்ரேலின் அரசியல் சரித்திரத்திலும் இது மிக முக்கியமான சம்பவம், இதன் மூலம், யாராக இருந்தாலும் சரி எங்கள்மீது கைவைத்தால் தொலைத்துவிடுவோம் என்கிற செய்தியைச் சொல்லாமல் சொல்லியிருந்தது இஸ்ரேல்.



இதனால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் அழிந்துவிடவில்லை. ஆனால் அதேசமயம் இஸ்ரேலுக்கு உள்ளேயும் வெளியேயும் யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் கணிசமாகக் குறைந்தன. மொசாட்டுக்கு அது தானே வேண்டும்?

ம்யூனிக் படுகொலைக்குப் பழிவாங்குவதற்காக மொசாட் எத்தனை பேரைக் கொன்றது என்கிற கணக்கு சரியாகத் தெரியவில்லை. சிலர் பத்து என்கிறார்கள் இன்னும் சிலர் பன்னிரெண்டு, பதினைந்து, இருபது, முப்பது என்று இஷ்டத்துக்கு அடுக்குகிறார்கள்.

ஆனால் ஒன்று இப்படிக் கொல்லப்பட்ட எல்லோரும் ம்யூனிக் படுகொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்க வாய்ப்பு இல்லை. இந்தச் சம்பவத்தை நல்ல சாக்காகப் பயன்படுத்திக்கொண்டு, இஸ்ரேலுக்கு எதிராக இயங்குகிறவர்களையெல்லாம் மொசாட் திட்டம் போட்டு அழித்துவிட்டது என்று பலர் குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மையில் ம்யூனிக் படுகொலையால் நேரடியாகப் பாதிகப் பட்டவர்கள் அதாவது அங்கே கொலை செய்யப்பட்ட இஸ்ரேல் விளையாட்டு வீரர்களின் குடும்பத்தினருக்கு இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைகளில் சுத்தமாக ஒப்புதல் இல்லை.

ஒரு கொலைக்குப் பழிவாங்குவதற்காக இன்னொரு கொலை செய்வது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை. இப்படிக் கொல்லப்பட்டவர்களுக்கும் ஒரு குடும்பம் இருக்கும்.மனைவி, குழந்தைகள் இருப்பார்கள். இப்படிப் பழிவாங்கி அவர்களுடைய சந்தோஷத்தையெல்லாம் அழித்துவிட்டால் சரியாப்போச்சா? இறந்துபோன எங்களுடைய கணவர்கள், மகன்கள் மறுபடியும் உயிரோடு திரும்பி வந்துவிடுவார்களா?அப்படியானால் மொசாட் வேறு என்ன செய்திருக்கவேண்டும்?

சில வருடம் முன்னாடி அடால்ஃப் ஐக்மெனை என்ன செய்தீர்கள்? மறந்துபோய் விட்டதா?

அடால்ஃப் ஹிட்லர் தெரியும் அது யார் அடால்ஃப் ஐக்மென்? அவரை மொசாட் என்ன செய்தது?

## அழுக்குப் பன்றி

சென்ற நூற்றாண்டின் மிகக் கொடூரமான சம்பவங்களில் ஒன்று அடால்ஃப் ஹிட்லரின் நாஜிப் படைகள் யூதர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்த இனப்படுகொலை.

அப்போது யூதர்களுக்கு தனி தேசம் எதுவும் இல்லை. உலகம் முழுக்க குறிப்பாக ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் அவர்கள் கணிசமான எண்ணிக்கையில் பரவியிருந்தார்கள்.

ஏனோ இதுஹிட்லரின் கண்களை உறுத்தியது யூதர்கள் அழித்து ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று முடிவெடுத்துவிட்டார். இதனால் ஹிட்லர் ஆட்சியின்கீழ் வந்த ஒவ்வொரு தேசத்திலும் யூதர்கள் வேட்டையாடப்பட்டார்கள்.

சித்திரவதை கம்பிகளில் அவர்கள் உடலும் மனமும் நரக அவஸ்தையை அனுபவித்தது. தினமும் இத்தனை ஆயிரம் யூதர்களைக் கொல்ல வேண்டும் என்று கணக்கு வைத்துக் கொண்டு செயற்பட்டது நாஜிப் படை.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் அடால்ஃப் ஹிட்லர் தான் சூத்திரதாரி. ஆனால் அவருக்குக் கீழிருந்த அடுத்த கட்டத் தலைவர்கள் ஜுனியர் அடிபொடிகளும்கூட இந்த விடயத்தில் ஹிட்லருக்கு இணையான கொடூரர்களாக இருந்தார்கள்.

அவர்களுடை ஒத்துழைப்பு இல்லாமல் ஹிட்லரால் இவ்வளவு குறுகிய காலகட்டத்தில் இத்தனை இலட்சம் யூதர்களைக் கொன்று தீர்த்திருக்க முடியாது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் அடால்ஃப் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். ஆனால் அவருடைய சிஷ்யப் பிள்ளைகள்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மா...

விக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 01 கிலோ கிராம் பால் மாவின் விலை 250 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

பால்மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பால் தேநீரின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தமிழகத்தில்...

அடைந்துள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் குடியிருப்புப் பகுதியைச்சேர்ந்த 28வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் ஏதிலியாகத் தஞ்சமடையும் நோக்கத்தில் அவர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக மன்னாரில் இருந்து பயணித்த நிலையில் தனுஷ்கோடி மூன்றாம் மணல்திட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடைய பெற்றோர், தமிழகத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் முகாமில் வசித்து வருவதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

## விபரீத முடி...

சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான அரிச்சந்திரன் வினோதா (வயது-36) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண்ணின் கணவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றார்.

இந்நிலையில் உயிர்மாய்த்த பெண்ணிற்கு கடன் கொடுத்தவர்களால் தொல்லை ஏற்பட்டுள்ளது.

கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் குறித்த பெண் நேற்று முன்தினம் உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## மன்னாரில்...

பயணித்துக் கொண்டிருந்தபோது, நானாட்டான் பிரதான வீதி வழியாக மன்னார் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பிக்கப் ரக வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை, தாய், மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், பலத்த காயங்களுக்கு உள்ளான 4 வயது சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

மேலும் தந்தை, தாய் மற்றும் 12 வயதுச் சிறுமி ஆகிய மூவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த வாகனத்தின் சாரதியை கைது செய்த முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## முழுங்காவிலைச்...

(வயது-21) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியைச் சேர்ந்த குறித்த யுவதி புத்தூர் பகுதியில் உள்ள உறவினரின் வீட்டில் தங்கியிருந்து யாழ்ப்பாணத்தில் தாதியர் பயிற்சிநெறியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் மன அழுத்தம் காரணமாக நேற்று முன்தினம் விபரீத முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,60,104)

## தையிட்டி...

அகற்றக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

விகாரை அகற்றப்பட்டு காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் காணி உரிமையாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சட்டத்தரணி காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ம-7)

## இலங்கை...

கள் மீது 30 வீத வரியை அறிவிடவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தன்முனைப்பு மற்றும் பலவீனமான பேச்சு வார்த்தைக்காக செலுத்தும் விலையாக இந்த வரி அமைந்துள்ளது.

கிட்டத்தட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதியின் எதிர்காலம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிக்கலான உலக பேச்சுவார்த்தைகளுக்கு பாடப் புத்தக நிபுணர்களை நம்பியிருப்பதன் மூலம் ஆபத்து என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## புதுக்...

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் பதுங்கு குழி ஒன்று நீதவானினால் பார்வையிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்கம் உள்ளிட்ட பொருட்கள் இங்கு பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன.

அதற்கமைய குறித்த பதுங்கு குழியை அகழ்வு செய்வதற்கு முன்பாக நீதவான் நேற்று முன்தினம் குறித்த இடத்திற்குச் சென்று கள ஆய்வில் ஈடுபட்டார்.

நீதவானின் ஆலோசனைக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பொலிஸார், கிளிநொச்சி குண்டு செயலிழக்கும் பிரிவினர், விசேட அதிரடிப் படையினர், தடயவியல் அதிகாரிகள் இணைந்து பதுங்கு குழியினுள் இருக்கும் நீரினை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 5886
C 5 1 9 3 9 2
அத சம்பத
C 9 3 9 2
சீட்டிழுப்பு இலக்கம் 0461
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 0002
விருச்சிகம் 03 27 30 42

தன நிதானய
திகதி - 2025.07.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1916
T 20 29 37 70 T
Double Chance 09493

மெகா பவர்
திகதி 10/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2234
C 13 04 15 68 69

ஜய JAYA
திகதி 2025.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 0154
X 4 0 0 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4128
சீட்டிழுப்பு திகதி 10.07.2025
E 13 18 39 68
E
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 1195
இடபம் 49 51 59 62 இடபம்
04145 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிர் தன சம்பத
10.07.2025 வெற்றி வாரம் 594
A 4 7 9 8 8 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,115,939.60
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2860
சீட்டிழுப்பு திகதி 2025.07.10 தினம் வியாழக்கிழமை
24 45 48 76 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,246,706.40

சனிதா
திகதி 10.07.2025 வெற்றி வாரம் 5021
06 09 45 55 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,261,390.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 722
சீட்டிழுப்பு திகதி 10.07.2025
வியாழக்கிழமை
08 19 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4572
சீட்டிழுப்பு திகதி 10.07.2025 தினம் வியாழக்கிழமை
01 16 32 44 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,796,212.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 13 35 42 49 56
சீட்டிழுப்பு வாரம் 2036
10.07.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.581,783,313.20
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2686
சீட்டிழுப்பு திகதி : 2025.07.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,686,476.00
07 19 48 57 X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 07 - 1930



மறைவு
08 - 07 - 2025

## கனகசபை குணரத்தினம்

மஞ்சத்தடி இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை குணரத்தினம் அவர்கள் கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்டவர்களான இராஜமனோகரி, கலாமதி, காந்திமதி, மனோகரன், கனேஸ்வரன், விக்கினேஸ்வரி மற்றும் சிவாஜினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்டவர்களான நித்தியானந்தம், தர்மசீலன், யோகசேனன், கோபாலசிங்கம், விஜயகுமார், வரதலட்சுமி, மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, நிரோசன், கோபிகா, தர்ஷிகா, சர்வகாந்தசேனை, மதுசன், மதுமிலன், விதுசிகா, தக்ஷா, கார்த்திகா, பவகாந்தசேனன், சாரங்கா, கௌஷிகா, விவேக்கா, யசிக்கா, கயானன், ரவகாந்தசேனை, திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேரனும் தனிக்கா, தருண், அனீனா, ருத்ரா, டர்னிக்கா, தனோச், துஷி, தனுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 089 0684, 079 295 7385

(4753)

## 30% தீர்வை...

கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44% வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இதற்கு ஒரு சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலம் நேற்று முன்தினம் (9) முடிவடைந்த நிலையில், 2025 ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 30% வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனது வரிகளை உயர்த்தினால், அந்த வீதம் தற்போதைய 30% வரியுடன் சேர்க்கப்படும் என ட்ரம்ப் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னதாக விதிக்கப்பட்ட 44% வரியை 30% ஆக குறைத்தது நேர் மறையான அணுகுமுறை என இலங்கை வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது.

பட்டியலிடப்பட்ட அனைத்து நாடுகளிலும் இலங்கைக்கு மிகப்பெரிய வரிக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர சுட்டிக்காட்டினார்.

இது இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் இராஜதந்திர மத்தியஸ்தத்தின் விளைவு என அவர் குறிப்பிட்டார்.

(ம-7)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு வெளிக்கள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

வயதெல்லை : 20 –35

தகைமை : க.பொ.த சாதாரண தரம்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

074 026 4148

(4758)

## வேலை மேற்பார்வையாளர் தேவை

யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் வலம்புரிப் பத்திரிகை நிறுவனத்திற்கு வேலை மேற்பார்வையாளர் தேவை.(ஆண்கள்)

- பகல், இரவுக் கடமை
- வயதெல்லை 30 – 55
- யாழ்.நகரத்திற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு : 076 097 3121

பொது முகாமையாளர்,
வலம்புரி பத்திரிகை காரியாலயம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

DTPE CAMPUS · DEC

கல்வியாண்டு 2025 JULY இற்கான பட்ட மற்றும் பட்டமேற்படிப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

டைனமிக் மூன்றாம் நிலை தொழிற்கல்வி வளாகமானது சர்வதேச அங்கீகாரம் கொண்ட பல்கலைக்கழக வளாகம் ஆகும். கடந்த ஆண்டுகளில் அதிகளவான மாணவர்களின் பட்டப்படிப்பு பூர்த்திக்கு பங்களித்ததில் பெருமை கொள்கின்றது.

### பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள் Regular Top-Up Available

- BACHELOR OF EDUCATION , BA IN ENGLISH
- BBA
- BENG IN CIVIL ENGINEERING
- BENG IN SOFTWARE ENGINEERING
- BSC IN TOURISM AND HOSPITALITY
- BSC IN INFORMATION TECHNOLOGY
- BSC IN NURSING
- MASTER BUSINESS ADMINISTRATION (MBA)

### நீங்கள் ஏன் இந்த பல்கலைக்கழக வளாகத்தை தெரிவு செய்ய வேண்டும்?

1. Basic Qualification in Recognized Diploma) with Work Experience or HND/Advanced Diploma or Higher Diploma
2. UGC Recognized & WES Approved
3. Flexible Payments Schemes
4. Flexible Class Schemes
5. Air Conditioned Class Rooms with Projector
6. Computer Labs Facilities
7. Qualified Lectures Panel
8. Recognized Qualification for Migration
9. Delivered on Hybrid Mode
10. Direct & Online Class
11. Weekend Classes for Workers

0770288711
0775438086

அனைத்து கற்கை நெறிகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (UGC) மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. சர்வதேசமளவில் WES அங்கீகாரமுள்ளது. விண்ணப்பதாரிகள் HND/Advanced Diploma / Higher Diploma/ Diploma with Work Experience ஒன்றினை கொண்டிருப்பதன் மூலம் நேரடியாக இறுதியாண்டு கற்கை நெறிக்குள் நுழையும் தகுதியை பெறமுடியும் மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வளாகத்தில் பார்வையிடலாம் வருடாந்த பட்டமளிப்பு விழா கொழும்பு BMICH (பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தி நடைபெறும் .

விண்ணப்பங்களை பல்கலைக்கழக வளாகத்திலோ மின்னஞ்சல் மூலமாகவோ பெற்று கொள்ளலாம். பூர்த்தி செய்து விண்ணப்பங்களை 2025/07/20 இற்கு முன் நேரடியாகவே dtpecampus@gmail.com மின்னஞ்சல் மூலமோ அனுப்பும் படி கோரப்படுகிறது.

(101)

## மணப்பெண் தேவை

01. கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், MSc in Economics, Denmark citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52531)
02. புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Germany citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
03. புங்குடுதீவு, இந்து, 1991, பூரடம், Business, Swiss + canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52067)
04. புலோலி, இந்து, 1993, புனர்பூசம், Bachelor of computer science Engineer, sweden citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36387)
05. கரவெட்டி, இந்து, 1990, மகம், MSc, Finland citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (34728)
06. பருத்தித்துறை, இந்து, 1993, ரேவதி, Bachelor of civil Engineering, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32449)
07. இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor of IT, Norway citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(31506)
08. நெடுந்தீவு, இந்து 1989, அஸ்வினி, BSc in civil Engineer, Uk citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (33075)
09. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA qualified, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(28386)
10. மானிப்பாய் - அச்சுவேலி, 1987, இந்து, பரணி, CIMA + Charted Accountant, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(28131)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

(1316)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-3381)

### கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-27 Kg 2680/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள் , எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

o UK 11Kg - 1400/- o France 11Kg - 2200/- o Germany 11Kg - 2000/-
o Swiss 11Kg - 2470/- o Australia 11Kg - 1980/- o Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வேலைக்கு ஆள் தேவை

யாழ். நகரில் இரும்புக் கடைக்கு உதவி ஆள் தேவை.

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 780 5950

(4762)

## பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- சிட்டை எழுதுனர் இருபாலாரும் (நாள் 1 - 2200)
- மரக்கறி வெட்டுபவர் (நாள் 1 - 2500)
- பார்சல் கட்டுபவர் (நாள் 1 - 2500)
- உணவு பரிமாறுபவர் (நாள் 1 - 2000)
- தேநீர் தயாரிப்பாளர் (நாள் 1 - 2500)
- துப்பரவுப் பணியாளர் (நாள் 1 - 2000)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (நாள் 1 - 2700)

தொடர்பு
077 907 9888

(4755)

## பதவி வெற்றிடம்

- கணனியில் தமிழ் ரைப்பிங்
  (இருபாலாரும் - அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும்)
- பக்க வடிவமைப்பாளர்
  (இருபாலாரும் - அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும்)

தொடர்பு:
076 097 3121

பொதுமுகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.